## 1. இரந்து பின்னிற்றல்(1), சேட்படை (2) –விரி

144. தலைவன் உட்கோள் சாற்றலும் பாங்கி
குலமுறை கிளத்தலும் தலைவன் தலைவி
தன்னை உயர்த்தலும் நன்னுதல் பாங்கி
அறியாள் போன்று வினாதலும் இறையோன்
இறைவி தன்மை இயம்பலும் பாங்கி
தலைவி அருமை சாற்றலும் தலைவன்
இன்றியமை யாமை இயம்பலும் பாங்கி
நின்குறை நீயே சென்றுஉரை என்றலும்
பாங்கியைத் தலைவன் பழித்தலும் பாங்கி
பேதமை ஊட்டலும் காதலன் தலைவி
மூதறிவு உடைமை மொழிதலும் பாங்கி
முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறலும்
தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி
உலகியல் உரைத்தலும் தலைமகன் மறுத்தலும்
பாங்கி அஞ்சி அச்சுறுத்தலும் ஆங்கவன்
கையுறை புகழ்தலும் தையல் மறுத்தலும்
ஆற்றா நெஞ்சினோடு அவன்புலத் தலும் அவள்
ஆற்றுவித்து அகற்றலும் ஆகும் நாலைந்தும்
இரந்துபின் நிற்றற்கும் சேட்படுத் தற்கும்
பொருந்துவ என்னோர் தெரிந்திசி னோரே.

### 1. தலைவன் உட்கோள் சாற்றல்

தலைவன் தலைவியின் பொருட்டாகத் தன் மனக் கருத்தைப் பாங்கியிடம் கூறுவதாகும்.

**மேவும் செய்குன்றமும் சோலையு மாகப் பொன் வெற்பும் விண்ணோர்**
**காவும் தரவும் வல்லேன் எனை ஆளும் கடைக்கண் வைத்தே**
**(தஞ்.கோ.81)**

நீங்கள் விளையாட அழகிய குன்றமும் மேருமலையும் கற்பகச் சோலையும் அமைத்துக் கொடுப்பேன்; என்மேல் கடைக் கண்வைப்பீராக.

### 2. பாங்கி குலமுறை கிளத்தல்

தங்கள் குலத்தின் தாழ்மையையும் தலைவன் குலத்தின் பெருமையையும் தோழி தலைவனுக்குக் கூறுதல்.

**இவளே கானல் நண்ணிய காமர் சிறுகுடி**
**நீல்நிறப் பெருங்கடல் கலங்க உட்புக்கு**
**மீன்எறி பரதவர் மகளே நீயே**

## 2. மடல் கூற்று (3) மடல் விலக்கு (4)

145. இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்கு
உலகின் மேல்வைத்து உரைத்தலும் அதனைத்
தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி
தலைமகள் அவயத்து அருமை சாற்றலும்
தலைமகன் தன்னைத் தானே புகழ்தலும்
அலர்முலைப் பாங்கி அருளியல் கிளத்தலும்
கொண்டுநிலை கூறலும் என்றிவை ஏழும்
மடற் கூற்றிற்கும் மடல் விலக்கிற்கும்
கடவ என்மனார் கற்றறிந் தோரே.

இவை ஏழும் மடல் கூற்றுக்கும் மடல் விலக்குக்கும் விரியாக அமையும்.

### 1. இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல்

முதல் வாயிலாகிய பாங்கியின் வழியில் தன் குறையைக் களைந்து கொள்ள முற்பட்ட தலைவனுக்கு அது முடியாமல் போகவே வேறு வழியில் தலைவியை அடைய நினைக்கிறான். தான் காதலித்தவளை அடையத் தடை ஏற்பட்டால் அதை நீக்க மடல் ஏறித் தலைவியைப் பெறுவர்.

**காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**
**மடல் அல்லது இல்லை வலி**

**(திருக்.1130)**

மடலேறுதல்

**உன் தலைவியின் ஓவியத்தையும் என் ஓவியத்தையும் ஒரு துணியில் எழுதிக் கைக்கொண்டு, பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரை மீதேறி உங்கள் ஊர்த் தெருவில் காட்சியளிப்பேன்**

**(தஞ். கோ.76)**

எனத் தலைவன் பாங்கியிடம் கூறுவது மடலேறுதல் பற்றிய நிகழ்வாகும்.

## 3. குறை நேர்தல், மடற்கூற்று ஒழிதல் (6) –விரி

146. தலைவி இளமைத் தன்மை பாங்கி
தலைவற்கு உணர்த்தலும் தலைவன் தலைவி
வருந்திய வண்ணம் உரைத்தலும் பாங்கி
செவ்வி அருமை செப்பலும் தலைவன்
செவ்வி எளிமை செப்பலும் பாங்கி
என்னை மறைப்பின் எளிதென நகுதலும்
அந்நகை பெறாஅது அவன் புலம்பலும் அவள்
தேற்றலும் கையுறை ஏற்றலும் கிழவோன்
ஆற்றலும் என்னும் அவ்வொன் பானும்
குறை நேர்தற்கும் மடல்கூற்று ஒழிதற்கும்
முறைமையின் உரிய முன்னுங் காலே.

தலைவி இளமைத் தன்மை பாங்கி தலைவற்கு உணர்த்தல் முதலாகக் கிழவோன் ஆற்றல் என்னும் ஒன்பதும் குறைநேர்தல், மடல் கூற்று ஒழிதல் என்னும் இரண்டுக்கும் விரியாம்.

### 1. தலைவி இளமைத் தன்மை பாங்கி தலைவற்கு உரைத்தல்

தலைவியின்பால் காதல் கொண்டுள்ள தலைவனிடம் அவளின் இளமைத் தன்மையைப் பாங்கி கூறுதல்.

தலைவி மிகவும் இளமைத் தன்மை உடையவள். மொட்டு போன்ற சிறியவளுக்காக நீ இரந்து நிற்பது ஏன்?

**இள அரும்பாம் இவள் மாட்டு**
**என் கொலோ நின்று இரப்பதுவே** (தஞ்.கோ.108)

## 4. குறைநயப்பித்தல், மறுத்தல் - விரி

147. **இறைவன் தனக்குக் குறைநேர் பாங்கி**
**இறைவிக்கு அவன்குறை உணர்த்தலும் இறைவி**
**அறியாள் போன்று குறியாள் கூறலும்**
**பாங்கி இறையோன் கண்டமை பகர்தலும்**
**பாங்கியைத் தலைவி மறைத்தலும் பாங்கி**
**என்னை மறைப்பது என்னைத் தழாஅலும்**
**கையுறை புகழ்வும்என்று இவ்விரு மூன்றும்**
**மெல்லிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்**
**வலிதாகச் சொல்லி மறுத்தற்கும் உரிய.**

இறைவன் தனக்குக் குறைநேர் பாங்கி இறைவிக்கு அவன்குறை உணர்தல் முதல் பாங்கி தலைவன் தந்த கையுறையைப் புகழ்வது வரை உள்ளவை பாங்கி குறை நயப்பித்தற்கும் தலைவி குறை மறுத்தற்கும் உரியவை ஆகும்.

### 1. இறைவன் தனக்குக் குறைநேர் பாங்கி இறைவிக்கு அவன் குறை உணர்த்தல்

தலைவனின் குறையைப் போக்க ஒப்புக் கொண்ட பாங்கி, தலைவியிடம் அவன் நிலையை எடுத்துக் கூறுதல்.

***தன்குறையிது என்னான் தழைகொணரும் தண் சிலம்பன்***
***நின்குறை என்று நினைப்பினனாய் - பொன் குறையும்***
***நாள் வேங்கை நீழலுள் நண்ணான் எவன் கொலோ***
***கோள்வேங்கை அன்னான் குறிப்பு***

***(திணைமாலை. 31)***

தன் உள்ளக் கருத்தையும் அவன் சொல்லவில்லை; கையுறையாகத் தழை கொண்டு வந்தான். வேங்கை மரநிழலிலும் நிற்காமல் திரிகிறான். அவன் மனக்கருத்து என்னவென்றே அறிய முடியவில்லை.

இவ்வாறு தலைவியின் மனக் கருத்தை ஆராய்வதற்காகத் தலைவனைப் பற்றி எதுவும் அறியாதவள் போல் பாங்கி கூறுகிறாள்.

### 2. இறைவி அறியாள் போன்று குறியாள் கூறல்

பாங்கி கூறியதைக் கேட்ட தலைவி, தனக்கு அவனைப் பற்றி எதுவும் தெரியாது என்பது போலவும் அவள் பேச்சைக் காதில் வாங்காதது போலவும் வேறு ஏதோ கூறுகிறாள்.

***தூய்மை சான்ற தொல்குடித் தோன்றி***
***வாய்மை நாவின் மதியாள் போல***
***உயர்தவ முனிவர் சார்வாப்***
***பெயரா நிலையது பிறங்கு திருமலையே***

## 5. குறை நயப்பித்தல் (7) நயத்தல் (8)

148. தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தலும்
மறுத்தற்கு அருமை மாட்டலும் தலைவன்
குறிப்புவேறு ஆக நெறிபடக் கூறலும்
தலைவியை முனிதலும் தலைவி பாங்கி
தன்னை முனிதலும் தன்கைக் கையுறை
ஏற்றலும் எனமுறை சாற்றிய ஆறும்
வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்
மெலிதாகச் சொல்லி மேவற்கும் உரிய.

### 1. தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்

தலைவி மீது கொண்ட வேட்கையால் தலைவன் துயருற்று வருந்தி நிற்பதைப் பாங்கி தலைவிடம் கூறுதல்.

**உருகு நெஞ்சமொடு நீடு நினைந்து**
**அருகு செல் ஞமலியும் என்னையும் நோக்கி**
**கழலொலி கரப்ப ஒதுங்கி**
**நிழலென நிற்பன் ஒரு நினை நினைந்தே**

உள்ளம் உருகி நீண்ட நினைவோடு அருகில் சென்ற வேட்டை நாயையும் என்னையும் பார்த்து நிழல் போல நிற்கின்றான்.

### 2. தோழி தலைமகனை மறுத்தற்கு அருமை மாட்டல்

இரந்து நிற்கும் தலைவன் எந்த நிலையிலும் மறக்க முடியாத அருமையானவன் எனத் தோழி தலைவிக்குக் கூறுதல்.

**உதுக்காண் தோன்றும் தேரே இன்றும்**
**நாம்எதிர் கொள்ளாம் ஆயின் தான்அது**
**துணிகுவன் போலாம் நாணுமிக உடையன்**
**வெண்மலை நெடுங்கோட்டு மறைகோ**
**அம்ம தோழி கூறுமதி நீயே** **(அகம். 380)**

தலைவன் தேர் இன்றும் வருகின்றது. நாம் எதிர்கொண்டு அழைக்காவிட்டால் அன்பிலேம் என என்று எண்ணி அகன்று விடுவான் எனக்கூறிப் பாங்கி தலைவியை இணங்க வைக்க அவன் அருமையைக் கூறுகிறாள்.

## 8. கூட்டல் (9) கூடல் (10) பாங்கிற்கூட்டல் (11) வேட்டல் (12)

149. இறைவி கையுறை ஏற்றமை பாங்கி
இறைவற்கு உணர்த்தலும் குறியிடம் கூறலும்
குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறலும்
குறியிடத்து உய்த்து நீங்கலும் இறையோன்
இடத்தெதிர்ப் படலும் இயைதலும் புகழ்தலும்
விடுத்தலும் பாங்கி மெல்லியல் சார்ந்து
கையுறை காட்டலும் மையுறை கண்ணியைப்
பாங்கிற் கூட்டலும் நீங்கித் தலைவற்கு
ஓம்படை சாற்றலும் உலகியல் மேம்பட
விருந்து விலக்கலும் பெருந்தகை விருந்திறை
விரும்பலும் என்னத் தெரிந்தபன் மூன்றும்
கூட்டல் முதலா வேட்டல் ஈறாப்
பாங்கிக்கு வகுத்த நான்கிற்கும் உரிய.

### 1. இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவர்க்கு உணர்த்தல்

*அளித்த கையுறையைத் தலைவி பெற்றுக் கொண்டதைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்.*

*நீ அளித்த கையுறையைத் தலைவி* **நீயாக அல்லது மாந்தழையாக நினைந்திலளே** *(தஞ்.கோ.129) எனப் பாங்கி குறிப்பிடுகின்றாள்.*

### 2. பாங்கி தலைமகற்குக் குறியிடம் கூறல்

*தலைவி கையுறை ஏற்று ஒப்புதல் அளித்த பின்னர்ப் பாங்கி தலைவனுக்குச் சந்திக்கும் இடத்தைக் கூறுதல்.*

**. . . . .தடம்புலாம்**
**தாழைமா ஞாழல் ததைந்து உயர்ந்த தாழ்பொழில்**
**ஏழை மான்நோக்கி இடம் (திணைமாலை.44)**

*தாழையும் ஞாழலும் வளர்ந்து செழித்துள்ள சோலையே தலைவி இருக்கும் இடமாகும்.*

### 3. பாங்கி குறியிடத்து இறைவிலக் கொண்டு சேறல்

*தலைவனுக்குக் குறியிடம் கூறியபிறகு பாங்கி தலைவியை உரிய இடத்தில் கொண்டு போய்ச்சேர்த்தல்.*

**பூமாதவிப் பந்தர்வாய் விளையாடுவதும் போதுகவே** *(தஞ்.கோ.131) எனக்கூறிப் பாங்கி தலைமகளை விளையாட அழைத்துப் போகிறாள்.*

### 4. பாங்கி தலைமகளைக் குறியிடத்து உய்த்து நீங்கல்

*இருவரும் இருக்க வேண்டிய இடத்தை விட்டுப் பாங்கி வேறு இடத்திற்கு வருதல்.*

பாங்கியிற் கூட்டத்து விரி இவை

150. அற்றமில் சிறப்பின் இவ்வறுபத்து ஒன்றும்
குற்றமில் பாங்கியிற் கூட்டத்து விரியே.

| | பாங்கியிற் கூட்டத்து விரி | |
|---|---|---|
| 144 | இரந்து பின் நிற்றல், சேட்படை | 20 |
| 145 | மடற்கூற்று, மடல் விலக்கல் | 7 |
| 146 | குறை நேர்தல், மடற்கூற்று ஒழிதல் | 9 |
| 147 | குறை நயப்பித்தல், மறுத்தல் | 6 |
| 148 | குறை நயப்பித்தல், நயப்பித்தல் | 6 |
| 149 | கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல் | 13 |
| | | 61 |

# 10. பாங்கமை பகற்குறி

**களவுக் காலத்தில் தலைவி தலைவனைக் கூடுதற்கு வரையறுத்த இடம்; அஃது அவள் இல்லத்து மதிற் புறத்தே தலைவன் எளிதின் உணர்ந்து வருதற்கு உரிய இடமாக வாய்க்கும்.**

**(தொல்.பொருள்.132 நச்சர்)**

தலைவனும் தலைவியும் பகற் பொழுதில் சந்திக்கத் தெரிவு செய்து கொண்ட இடம் **பகற்குறி** ஆகும்.

### பகற்குறியின் வகை

151. **கூட்டல் கூடல் பாங்கிற் கூட்டல்**
**வேட்டல் என்று ஒரு நால்வகைத்தே பகற்குறி.**

பகற்குறியில் நான்கு வகைகள் உள்ளன.

**1. கூட்டல் :** பகற் குறியிடத்திற்குத் தலைவியை அழைத்துக் கொண்டு போய்ப் பாங்கி தலைவனுடன் சேர்த்தல்

**2. கூடல் :** பகற்குறி இடத்தில் தலைவனும் தலைவியும் சந்தித்துக் கூடல்

**3. பாங்கிற் கூட்டல் :** பகற் குறியில் தலைவனும் தலைவியும் கூடி மகிழ்ந்த பிறகு பாங்கி தலைவியைப் பாங்கியர் கூட்டத்தில் (ஆயம் கூட்டல்) சேர்த்தல்

**4. வேட்டல் :** பாங்கியின் சொற்கேட்டுத் தலைவன் விருந்தினை விரும்புதல்

(35)

### பகற்குறியின் விரி

152. **குறியிடம் கூறல் முதலாப் பெறலரும்**
**விருந்திறை விரும்பல் ஈறாப் பொருந்தப்**
**பகர்ந்த பன்னிரண்டும் பகற்குறி விரியே.**

149 ஆம் நூற்பாவில் கூறப்பட்டுள்ள **குறியிடம் கூறல்** முதலாக **விருந்திறை விரும்பல்** என்னும் பன்னிரண்டும் பகற்குறியின் விரியாகும்.

1. *குறியிடம் கூறல்*
2. *குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல்*
3. *குறியிடத்து உய்த்து நீங்கல்*
4. *இறையோன் இடத்து எதிர்ப்படுதல்*
5. *இயைதல்*
6. *புகழ்தல்*
7. *விடுத்தல்*
8. *பாங்கி மெல்லியல் சார்ந்து கையுறை காட்டல்*
9. *கையுறை கண்ணியைப் பாங்கிற் கூட்டல்*
10. *நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல்*
11. *உலகியல் மேம்பட விருந்து விலக்கல்*
12. *விருந்திறை விரும்பல்*

(36)

## ஒருசார் பகற்குறியின் வகைகள்

153. **இரங்கல் வன்புறை இற்செறிப்பு உணர்த்தல்என்று**
**ஒருங்கு மூவகைத்து ஒருசார் பகற்குறி.**

இரங்கல், வன்புறை, இற்செறிப்பு உணர்த்தல் என்னும் மூன்றும் ஒருசார் பகற்குறி வகைகளாகும்.

**1. இரங்கல் :** தலைவனைப் பிரிந்து தலைவி வருந்துதல்; அது கண்டு பாங்கி வருந்துதல்; தலைவியைப் பிரித்ததால் தலைவன் வருந்துதல்

**2. வன்புறை :** பிரிந்த தலைவனுக்காக வருந்தும் தலைவியைப் பாங்கி கடிந்து கூறல்

**3. இற்செறிப்பு உணர்த்தல் :** தலைவியின் தோற்றப் பொலிவு கண்டு இல்லத்தவர் இற்செறித்தல்

**காப்பும் பூண்டிசின் கடையும் போகலை**
**பேதை அல்லை மேதைஅங் குறுமகள்** (*அகம்.7*)

(37)

## ஒருசார் பகற்குறியின் விரி

154. **கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்**
**பொழுதுகண்டு இரங்கலும் பாங்கி புலம்பலும்**
**தலைவன் நீடத் தலைவி வருந்தலும்**
**தலைவியைப் பாங்கி கழறலும் தலைவி**
**முன்னிலைப் புறமொழி மொழிதலும் இன்னுயிர்**
**பாங்கியொடு பகர்தலும் பாங்கி அச்சுறுத்தலும்**
**நீங்கற்கு அருமை தலைவி நினைந்திரங்கலும்**
**தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றலும்**
**சிறைப் புறமாகச் செறிப்பு அறிவுறுத்தலும்**
**முன்னிலைப் புறமொழி மொழிந்து அறிவுறுத்தலும்**
**முன்னின்று உணர்த்தலும் முன்னின்று உணர்த்தி**
**ஓம்படை சாற்றலும் மேம்படு கிழவோன்**
**தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலும்**
**என்று அவ்வீரேழும் எல்லுக்குறி விரியே.**

மேலே குறிக்கப் பெற்ற பதினான்கும் ஒருசார் பகற்குறியின் விரிவாகும்.

# 11. பகற்குறி இடையீடு

பகற்குறி நாடி வந்த தலைவன் அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்தல் (இடையீடு - தடை) பகற்குறி இடையீடு எனப்படும்.

## பகற்குறி இடையீட்டின் வகை

155. **விலக்கல் சேறல் கலக்கம் என்றாங்கு**
**இகப்பின்மூ வகைத்தே பகற்குறி இடையீடு.**

பகற்குறி இடையீடு விலக்கல், சேறல், கலக்கம் என மூன்று வகைப்படும்.

**1. விலக்கல்:** தலைவனும் தலைவியும் குறியிடம் வந்து சேறலைப் பாங்கி விலக்குதல்

**2. சேறல் :** பாங்கி தலைவியை ஆடும் ஆட்டத்தினின்று அழைத்துச் செல்லுதல்

**3. கலக்கம் :** தலைவனை எய்தப் பெறாமையால் தலைவி மனம் கலங்குதலும் தலைவியைக் கூடப் பெறாமையால் தலைவன் மனம் கலங்குதலும்



## பகற்குறி இடையீட்டின் விரி

156. **இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கலும்**
**இறைவியைக் குறிவரல் விலக்கலும் இறைமகள்**
**ஆடிடம் நோக்கி அழிதலும் பாங்கி**
**ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறலும் பின்னாள்**
**நெடுந்தகை குறிவயின் நீடுசென்று இரங்கலும்**
**வறுங்களம் நாடி மறுகலும் குறுத்தொடி**
**வாழும்ஊர் நோக்கி மதிமயங்கலும் எனும்**
**ஏழும் பகற்குறி இடையீட்டு விரியே.**

மேலே கூறப்பட்ட ஏழும் பகற்குறி இடையீட்டின் விரிவாகும்.

### 1. இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்

பகற்குறியில் தலைவியைச் சந்திக்கத் தலைவன் வரும்போது ஏதேனும் இடையூறு வருமெனப் பாங்கி குறிவிலக்குதல்.

**தலைவியின் மனம் கவர்ந்த தலைவனே! நீ பகற்குறியிடத்துக்கு வாரற்க. தினைக் கதிர்கள் முற்றிவிட்டன. கிளிகளும் தினைப் புதைத்திற்கு வருகின்றன. அன்ன நடையாளாகிய தலைவியுடன் தாயும் வருவாள்.**

(தஞ்.கோ.156)

### 2. பாங்கி இறைவியைக் குறிவரல் விலக்கல்

பாங்கி தலைவனுக்குக் கூறியதைப் போலவே தலைவியையும் பகற் குறியில் இடையூறு எண்ணித் தடுத்தல்.

**ஆரம் நாறும் மார்பினை**
**வாரற்கதில்ல வருகுவள் யாயே** (குறுந்.198)

சந்தனம் மணக்கும் மார்பினை உடையவனே! நீ குறி இடத்திற்கு வரவேண்டாம். நம்தாய் அவ்விடம் வருவாள்.

### 3. இறை மகள் ஆடிட நோக்கி அழிதல்

தலைமகள் தான் ஓடியாடி விளையாடும் இடங்களைக் கண்டு இனி அவ்வாறு செய்ய முடியாதே என வருந்துதல்.

**அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி**
**குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்**
**இருவி நீள்புனம் கண்டும்**
**பிரிதல் தேற்றாப் பேரன்பினவே**

(ஐங்.284)

விளைந்த தினையைக் கொய்தபிறகும் அவ்விடத்தை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. ஆனால் இல்லத்தாரின் இற்செறிப்பால் வரமுடியாது. கிளிகள் மட்டும் வந்து போகின்றன.

### 4. பாங்கி ஆடிடம் விடுத்துக் கொண்டு அகறல்

தினைமுற்றி அறுக்கப்பட்டதால் இனித் தினைப்புனம் காக்க வேண்டியதில்லை எனப் பாங்கி தலைவியை அழைத்துக் கொண்டு போதல்.

**பரணே! இனிக்கிளி ஓட்ட வேண்டியதில்லை; இல்லத்தவரின் ஆணையால் குடிலுக்கு ஏகுகின்றோம். யான் நின்னிடம் கூறிய செய்திகளைத் தலைவனிடம் கூறுவாயாக**

(தஞ்.கோ.

# 12. இரவுக்குறி

தலைவன் தலைவியை இரவுக் குறியிடத்தே கூடுதல். களவுக் காலத்தே தலைவன் விருப்பதை ஈடேற்றுதலைத் தன் அறமாகக் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்து உரைக்கும் இடம் இரவுக் குறியாம்.

**இரவுக்குறியின் வகை**

157. **வேண்டல் மறுத்தல் உடன்படல் கூட்டல்**
**கூடல் பாராட்டல் பாங்கிற் கூட்டல்**
**உயங்கல் நீங்கல்என்று ஒன்பது வகைத்தே**
**இயம்பிப் போந்த இரவுக் குறியே.**

| | | |
|---|---|---|
| ***1. வேண்டல்*** | ***4. கூட்டல்*** | ***7. பாங்கிற் கூட்டல்*** |
| ***2. மறுத்தல்*** | ***5. கூடல்*** | ***8. உயங்கல்*** |
| ***3. உடன்படல்*** | ***6. பாராட்டல்*** | ***9. நீங்கல்*** |

என்னும் ஒன்பதும் இரவுக் குறியின் வகைகளாம்.

**1. வேண்டல் :** தலைவன் பாங்கியிடம் இரவுக்குறி வேண்ட அவள் தலைவியிடம் கேட்டல்.

**2. மறுத்தல் :** தலைவன் வேண்டியதைப் பாங்கியும் தலைவியும் மறுத்தல்.

**3. உடன்படல் :** பாங்கி தலைவன் கூறியதையும் தலைவி பாங்கி கூறியதையும் ஏற்று உடன்படல்.

**4. கவட்டல் :** பாங்கி தலைவியை அழைத்துச் சென்று குறியிடத்து விடுத்தல்.

**5. கவடல் :** தலைவனும் தலைவியும் இரவுக்குறியில் கூடுதல்.

**6. பாராட்டல் :** தலைவன் தலைவியைப் புகழ்தலும் பாங்கி தலைவன் தந்த கையுறையைப் புகழ்தலும்.

**7. பாங்கியிற் கவட்டல் :** தலைவன் தலைவியைப் பாங்கியிடம் சேர்ப்பித்தல்.

**8. உயங்கல் :** இரவுக் குறிக்கண் தலைவன் வரும் வழியிடையுள்ள துன்பங்களை நினைந்து தலைவி வருந்துதல்.

**9. நீங்கல் :** பாங்கி தலைவியைக் குறியிடத்து உய்த்து நீங்குதல்; தலைவன் தலைவியைக் கூடி நீங்குதல்.

## இரவுக்குறியின் விரி

158. இறையோன் இருட்குறி வேண்டலும் பாங்கி
நெறியது அருமை கூறலும் இறையோன்
நெறியினது எளிமை கூறலும் பாங்கி
அவன்நாட்டு அணியியல் வினாதலும் கிழவோன்
அவள்நாட்டு அணியியல் வினாதலும் அவற்குத்
தன்நாட்டு அணியியல் பாங்கி சாற்றலும்
இறைவிக்கு இறையோன் குறையறிவு றுத்தலும்
நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தலும்
நேரிழை பாங்கியொடு நேர்ந்து உரைத்தலும்
நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்கு உரைத்தலும்
குறியிட நிறீஇத் தாய்துயில் அறிதலும்
இறைவிக்கு இறைவன் வரவு அறிவுறுத்தலும்
அவள்கொண்டு சேறலும் குறிஉய்த்து அகறலும்
வண்டுஉறை தாரோன் வந்து எதிர்ப்படுதலும்
பெருமகள் ஆற்றினது அருமைநினைந்து இரங்கலும்
புரவலன் தேற்றலும் புணர்தலும் புகழ்தலும்
இறைமகள் இறைவனைக் குறிவிலக்கலும் அவன்
இறைவியை இல்வயின் விடுத்தலும் இறைவியை
எய்திப் பாங்கி கையுறை காட்டலும்
இற்கொண்டு ஏகலும் பிற்சென்று இறைவனை
வரவு விலக்கலும் பெருமகன் மயங்கலும்
தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தலும்
திருமகள் புணர்ந்தவன் சேறலும் என்றாங்கு
இருபத்து ஏழும் இரவுக்குறி விரியே.

மேலே குறிக்கப் பெற்ற இருபத்தேழும் இரவுக் குறியின் விரியுள் அடங்கும்

### 1. இறையோன் இருட்குறி வேண்டல்

தலைமகனாகிய இறையோன் பாங்கியிடம் மனைப் புறத்தில் தலைவியுடன் இரவில் கூடக் குறியிடம் வேண்டல்.

உங்கள் சிற்றூர்க்கு இன்றிரவு யான் விருந்தினனாக வரலாமா? இப்படிப் பட்ட விருந்தினை நீங்கள் தேடினாலும் கிடைக்குமா? **ஒரு விருந்து எங்களைப் போல் எய்துமோ கங்குல் உங்களுக்கே?**

(தஞ்.கோ. 163)

# 13. இரவுக்குறி இடையீடு

தலைவனும் தலைவியும் சந்திப்பதற்காகக் குறித்து வைத்துள்ள இரவுக்குறி இடத்தை அடைவதற்குள் ஏற்படும் இடையீடுகளை விளக்குவதே **இரவுக்குறி** இடையீடு ஆகும்.

## இரவுக்குறி இடையீட்டின் வகை

159. அல்லகுறி வரும்தொழிற்கு அருமை என்றாங்கு
எல்லிக்குறி இடையீடு இருவகைத்து ஆகும்.

இரவுக்குறி பிழைபடுவது அல்லகுறி, தலைவன் வரவைத் தடுப்பவை **வருந்தொழிற்கு அருமை** என்னும் இரண்டும் இரவுக்குறி இடையீட்டின் வகைகள் ஆகும்.

### 1. அல்லகுறி

இரவில் தலைவனும் தலைவியும் சந்தித்துக்கொள்ளக் குறி ஏற்பாடு செய்திருப்பர். நீர் ஒலித்தல், பறவை ஒலித்தல் போலத் தலைவன் செயற்கையாகத் தான் வந்த குறி அறிவிப்பான்.

பறவைகள் திடீரென்று பறந்து ஒலி எழுப்பும். இது இயற்கையாக நிகழ்வது. தலைவன் வந்து விட்டதாக எண்ணித் தலைவியும் பாங்கியும் வருவர். அவன் வராதது கண்டு இல்லம் செல்வர். தலைவன் பிறகு வந்தாலும் இல்லத்திலிருந்து மீண்டும் வரமுடியாது. இவ்வாறு நிகழ்வதே அல்லகுறி, குறி அல்லாதவை எனப் பொருள்படும்.

### 2. வருந்தொழிற்கு அருமை

தலைவன் இரவுக் குறியில் தலைவியைக் காணக் குறியிடத்திற்கு வருவான். அவ்வாறு அவன் வரும்போது இயல்பாகவும் செயற்கையாகவும் நிகழ்வது எனப் பல இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேரிடும். எல்லாவற்றையும் கடந்து வருவதே வரும் தொழிற்கு அருமை எனப்படும்.

## அல்லகுறியின் வகை

160. இறைவிக்கு இகுளை இறைவரவு உணர்த்துழித்
தான்குறி மருண்டமை தலைவிஅவட்கு உணர்த்தலும்
பாங்கி தலைவன் தீங்குஎடுத்து இயம்பலும்
புலந்துஅவன் போதலும் புலர்ந்தபின் வறுங்களம்
தலைவிகண்டு இரங்கலும் தன்துணைக்கு உரைத்தலும்
தலைமகள் அவலம் பாங்கி தணித்தலும்
இறைவன்மேல் பாங்கி குறிபிழைப்பு ஏற்றலும்
இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பு ஏற்றலும்
அவள்குறி மருண்டமை அவள்அவற்கு இயம்பலும்
அவன்மொழிக் கொடுமைசென்று அவள்அவட்கு இயம்பலும்
என்பிழைப்பு அன்றென்று இறைவி நோதலும்என
ஒன்று பன்னொன்றும் அல்லகுறிக் குரிய.

மேலே குறிக்கப்பெற்ற பன்னிரண்டும் அல்லகுறியின் விரிவாகும்.

**1. இறைவிக்கு இகுளை இறைவரவு உணர்த்தல்**

பாங்கி தலைவிக்குத் தலைவனின் வருகையை உணர்த்துதல்.

**புன்னை மென்காய்ப் போகுசினை இரிய**
**வாடுவளி தூக்கிய அசைவிற் கொல்லா**
**தெண்ணீர்ப் பொய்கையில் வீழ்ந்தன**
**எண்ணினை உரைமே உணர்குவல் யானே**

புன்னை மரத்தின் மெல்லிய காய்கள் கிளையினின்று நீங்கி அசைவற்ற பொய்கையில் வீழ்ந்து ஒலி எழுப்புகிறது. இது பற்றிய உன் கருத்துயாது தலைவியே!

**2. தான்குறி மருண்டமை தலைவி பாங்கிக்கு உணர்த்தல்**

வேறொரு வகையில் நிகழந்ததைத் தலைவன் குறியாகக் கருதி மயங்கியதைத் தலைவி பாங்கிக்குக் கூறுதல்.

**அணிகடல் தண்சேர்ப்பன் தேர்ப்பரிமாப் பூண்ட**
**மணிஅரவம் என்று எழுந்து போந்தேன் - கனிவிரும்பும்**
**புள்ளரவம் கேட்டுப் பெயர்ந்தேன் - ஒளியிழாய்!**
**உள்ளுருகு நெஞ்சினேனாய்**

**(ஐந்.ஐம்.50)**

பாங்கியே! தலைவன் வரும் தேரில் குதிரையின் கழுத்தில் கட்டப்பட்ட மணியொலி என்று எழுந்து வந்தேன். ஆனால் அவ்வொலி நம் சோலையில் பழம் தின்னும் பறவைகளின் ஒலிகள் என்பதை அறிந்து வருந்தினேன்.

## வருந்தொழிற்கு அருமை

161. தாயும் நாயும் ஊருந் துஞ்சாமை
காவலர் கடுகுதல் நிலவு வெளிப்படுதல்
கூகை குழறுதல் கோழிகுரல் காட்டுதல்
ஆகிய ஏழும் அல்லுக்குறித் தலைவன்
வருந்தொழிற்கு அருமை பொருந்துதல் உரிய

மேலே குறிக்கப்பட்டுள்ள ஏழும் வருந்தொழிற்கு அருமை என்பதற்கு விரியாகும்.

**1. தாய் துஞ்சாமை**

இரவுக் குறியில் தலைவனைச் சந்திக்கச்செல்லத் தாய் தூங்காமல் தடையாக இருத்தல்.

**பெண் கொலை புரிந்த நன்னன்போல**
**வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை!**
**ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தென**
**பகைமுக ஊரின் துஞ்சலோ இலளே** **(குறுந்.292)**

பெண் கொலை செய்த நன்னன் போல எம் தாய் நரகத்தில் சேர்வாளாக! நகைமுக விருந்தினனாகிய தலைவன் வந்திருக்கும் போது தாய் உறங்கவே இல்லை.

**2. நாய் துஞ்சாமை**

நாய் தூங்காமல் புதியவர்களைக் கண்டால் குரைத்து ஊரை எழுப்பிவிடுதல்.

**கண்ணெனன் பவர்வரக் கங்குலில் ஞானிக்கணம் குரைத்துத்**
**துண்ணெனன் கடுங்குரல் வாய் அன்னை துஞ்சினும் துஞ்சிலவே**
**(தஞ்.கோ.203)**

அன்னை தூங்கினாலும் கண்போன்ற தலைவர் வரும் போது நாய் குரைத்து ஒலி எழுப்புகின்றது.

**3. ஊர் துஞ்சாமை**

நாம் தூங்கினாலும் ஊரார் தூங்காமல் இருத்தல்.

தலைவரைப் பிரிந்திருக்கும் நாம் கண்ணுறங்கினாலும் இந்த நகரவர் தூங்குவதில்லை. **நாம் கண் உறங்கினும் ஓ உறங்கார் கண் நகரவரே** (தஞ்.கோ.204)

(46)

# 14. வரைதல் வேட்கை

பகற்குறியிலும் இரவுக்குறியிலும் பலவிதமான இடையூறுகள் ஏற்படுவதால் தலைவி தலைவனை விரைவில் மணந்து கொள்ளும்படி சொல்லுதல்.

## வரைதல் வேட்கையின் வகை

163. அச்சம் உவர்த்தல் ஆற்றாமை என
மெச்சிய வரைதல் வேட்கை மூவகைத்தே.

வரைதல் வேட்கை பின்வருமாறு மூன்று வகையில் அமையும்.

**1. அச்சம் :** இரவுக் குறிகளில் பல்வேறு இடையூறுகள் ஏற்படுவதால் தலைவி அச்சம் அடைதல்.

**2. உவர்த்தல் :** பாங்கி தலைவனை வெறுப்பு ஏற்படும்படி பேசுதல்.

**3. ஆற்றாமை :** தலைவன் பிரிவைத் தாங்காது வருந்துதல்.

இவை திருமணத்தை விரைவில் முடித்து விட வேண்டும் என்னும் வேட்கையை அதிகரிக்கும்.

(47)

## வரைதல் வேட்கையின் விரி

164. பருவரல் வினவிய பாங்கிக்கு இறைவி
அருமறை செவிலி அறந்தமை கூறலும்
தலைமகன் வருந்தொழிற்கு அருமை சாற்றலும்
தலைமகன் ஊர்க்குச் செலவுஒருப் படுதலும்
பாங்கி இறைவனைப் பழித்தலும் பூங்கொடி
இறையோன் தன்னை நொந்து இயற்பட மொழிதலும்
கனவுநலிபு உரைத்தலும் கவின்அழிவு உரைத்தலும்
தன்துயர் தலைமகற்கு உரைத்தல் வேண்டலும்

துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லலும்
அலர்பார்த்து உற்ற அச்சக் கிளவியும்
ஆறுபார்த்து உற்ற அச்சக் கிளவியும்
காமம் மிக்க கழிபடர் கிளவியும்
தன்னுள் கையாறு எய்திடு கிளவியும்
நெறிவிலக்கு வித்தலும் குறிவிலக்கு வித்தலும்
குரவரை வரைவு எதிர்கொள்ளு வித்தலும்என
உரைபெற வகுத்த ஒன்பதிற்று இரட்டியும்
வரைதல் வேட்கை விரியெனப் படுமே.

மேலே கூறப்பட்டுள்ள பதினெட்டு வகைகளும் வரைதல் வேட்கையின் விரியாகும்.

**1. பருவரல் வினவிய பாங்கிக்கு இறைவி அருமறை செவிலி அறிந்தமை கூறல்**

துயரம் பற்றிக் கேட்ட பாங்கிக்குத் தலைவி களவொழுக்கத்தைச் செவிலித்தாய் அறிந்ததைக் கூறுதல்.

பிரிந்து சென்ற நம் தலைவன் மீண்டும் வந்தபோது நிலவைக் கண்டு நாணிய தாமரை போல என் முகமும் நாணியது. இதனைச் செவிலித் தாய் கண்டு கொண்டாள். **நாணிய பங்கயம் போல் நாணிக் கவிழ்ந்ததனால் அறிந்தாள் அன்னை நம் களவே** (தஞ்.கோ.210)

**2. தலைமகன் வரும் தொழிற்கு அருமறை சாற்றல்**

களவொழுக்கத்தின் பொருட்டு வரும் தலைவன் அடையும் இன்னல்களைத் தலைவி கூறுதல்.

விழா இல்லாத போதும் இவ்வூர் உறங்குவதில்லை. அப்படியே உறங்கினும் நம் அன்னை உறங்குவதில்லை. ஊர்க்காவலர், நாய், நிலவு, கூகை, கோழி என எல்லாமே உறங்குவதில்லை. இதனால் இரவுக் குறியில் தலைவரால் வர முடியவில்லை.

**இரும்பிழி மாரி அழுங்கல் மூதூர்**
**விழவு இன்று ஆயினும் துஞ்சாது ஆகும்.**

**(அகம்.122)**

**3. தலைமகன் ஊர்க்குச் செலவு ஒருபடுதல்**

பிரிந்து சென்ற தலைவன் வாராமையால் அவன் ஊருக்குச் செல்லத் தலைவி துணிதல்.

**நம்பால் நலன்உண்ட நம்பாதனர் தம்நகர் வினவித்**
**தம்பால் உடன் சென்று சார்குவம்** **(தஞ்.கோ.212)**

# 15. வரைவு கடாதல்

தலைவன் விரைவில் தலைவியை மணந்து கொள்ள வேண்டும் எனப் பாங்கி தலைவனிடம் கூறுவது **வரைவு கடாதல்** எனப்படும்.

## வரைவு கடாதலின் வகை

165. பொய்த்தல் மறுத்தல் கழறல் மெய்த்தல்என்று
ஒருநால் வகைத்தே வரைவு கடாதல்.

பொய்த்தல், மறுத்தல், கழறல், மெய்த்தல் என்னும் நான்கும் வரைவு கடாதல் வகைகளாகும்.

**1. பொய்த்தல் :** விரைந்து தலைவியை மணந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பாங்கி தலைவனிடம் பொய் கூறுதல்.

**2. மறுத்தல் :** தலைவன் களவை நீட்டித்துத் தலைவியைச் சந்திக்க வர நினைப்பதைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பாங்கி மறுத்தல்.

**3. கழறல் :** தலைவனைக் கடிந்து பேசி விரைவில் தலைவியை மணந்து கொள்ளப் பாங்கி வற்புறுத்தல்.

**4. மெய்த்தல் :** தலைவனிடம் பாங்கி சில உண்மையான செய்திகளைக் கூறுதல்.

(49)

## வரைவு கடாதல் விரி

166. வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலும்
அலர் அறிவுறுத்தலும் தாய்அறி வுணர்த்தலும்
வெறி அச்சுறுத்தலும் பிறர்வரைவு உணர்த்தலும்
வரைவெதிர் உணர்த்தலும் வரையும்நாள் உணர்த்தலும்
அறிவு அறிவுறுத்தலும் குறி பெயர்த்திடுதலும்
பகல் வருவானை இரவுவருக என்றலும்
இரவு வருவானைப் பகல்வருக என்றலும்
பகலினும் இரவினும் பயின்றுவருக என்றலும்
பகலினும் இரவினும் அகல்இவண் என்றலும்
உரவோன் நாடும் ஊரும் குலனும்
மரபும் புகழும் வாய்மையும் கூறலும்
ஆறு பார்த்துற்ற அச்சம் கூறலும்
ஆற்றாத் தன்மை ஆற்றக் கூறலும்
காவல்மிக உரைத்தலும் காமம்மிக உரைத்தலும்
கனவுநலிவு உரைத்தலும் கவின்அழிவு உரைத்தலும்
எனமுறை நாடி இயம்பிய இருபதும்
வரைவு கடாதல் விரியெனப் படுமே.

மேலே குறிக்கப்பட்ட இருபதும் வரைவு கடாதலின் விரி எனக் கொள்ளப்படும்.

**1. வினவிய செவிலிக்கு மறைத்தமை தலைவர்க்குத் தோழி விளம்பல்**

தலைவியின் மாறுபாடு கண்டு ஐயுற்றுக் கேட்ட செவிலிக்குப் பாங்கி உண்மையை மறைத்துக் கூறியதைப் பாங்கி தலைவனிடம் கூறுதல்.

தளரா மார்பகமும் தளர்ந்த இடையினையும் உடைய தலைவி இரவில் கண்ணயராதது ஏன் எனக் கேட்ட செவிலிக்கு ஒரு பொய்யைக் கூறினேன்; எங்களைக் காக்க வேண்டியது உன் பொறுப்பாகும். **தளரா இளமுலை தாங்க கில்லாது தளர் இடை கண் வளராதது என்?** *(தஞ்.கோ.228)*

**2. அலர் அறிவுறுத்தல்**

பலர் அலர் கூறுதலை-பழி கூறுதலைப் பாங்கி தலைவனுக்குத் தெரிவித்தல்.

கள்ளுச் சாடியில் வண்டுகள் ஒலிப்பது போலவும் தேர் இயங்குவதால் தெருவில் எழும் ஆரவாரம் போலவும் அலர் எங்கும் எழுந்து விட்டது. அலரால் அவள் உயிர் நீங்கினாலும் அது இன்னாததே ஆகும்.

**அறிந்தோர் அறனிலர் என்றலின் சிறந்த**
**இன்னுயிர் கழியினும் நனி இன்னாதே**
. . . . .
**கள்ளுடைத் தடவில் புள்ஒலித்து ஓவாத்**
**தேர் வழங்கு தெருவின் அன்ன**
**கௌவை ஆகின்றது ஐயநின் அருளே**

**(நற்.227)**

**3. தாய் அறிவுணர்த்தல்**

தலைவியின் களவொழுக்கத்தைத் தாய் அறிந்ததைப் பாங்கி தலைவனிடம் கூறுதல்.

நாரையின் கூட்டத்தைப் போல மகளிர் கூந்தலை உணர்த்தும் துறைக்குத் தலைவனே! ஒரு தேர் பலகால் இவ்விடம் வருவதால் இங்கு வரக்கூடாது என்று தாய் இற்செறிக்கிறாள்.

**பொங்குகழி நெய்தல் உறைப்ப இத்துறைப்**
**பல்கால் வரூஉம் தேர் என**
**செல்லாதீமோ என்றனள் யாயே**

**(ஐங்.186)**

**4. வெறி அச்சுறுத்தல்**

செவிலியும் தாயும் தலைவியின் நோய் தீர்க்க வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்திருப்பதைப் பாங்கி தலைவனிடம் கூறுதல்.

# 16. ஒருவழித் தணத்தல்

தலைவன் தலைவியின் களவொழுக்கம் அலராக வெளிப்பட்டதும், பாங்கி தலைவனிடம் விரைந்து மணம் (வரைவு) புரிந்திட வேண்டுகிறாள். அப்போது தலைவன் ஒருமுறை தன் ஊருக்குப் போய் விட்டு வருவதாகக் கூறுவதே **ஒருவழித் தணத்தல்** எனப்படும்.

### ஒருவழித் தணத்தலின் வகை

**167. செலவு அறிவுறுத்தல் செலவு உடன்படாமை**
**செலவு உடன்படுத்தல் செலவு உடன்படுதல்**
**சென்றுழிக் கலங்கல் தேற்றி ஆற்றுவித்தல்**
**வந்துழி நொந்துரை என்றுஎழு வகைத்தே**
**ஒன்றக் கூறிய ஒருவழித் தணத்தல்.**

மேலே குறிக்கப்பட்ட ஏழும் ஒருவழித் தணத்தலின் வகைகள் ஆகும்.

**1. செலவு அறிவுறுத்தல் :** தலைவன் தான் ஒருவழித் தணத்தலைப் பாங்கிக்குக் கூற, அவள் அதனைத் தலைவிக்குத் தெரிவித்தல்.

**2. செலவு உடன்படாமை :** பாங்கியும் தலைவியும் தலைவன் பிரிந்து செல்வதை ஏற்றுக் கொள்ள மறுத்தல்.

**3. செலவு உடன்படுத்தல் :** தலைவன் தோழியிடம் தான் பிரிந்து செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கூறி ஏற்கச் செய்தல்.

**4. செலவு உடன்படுதல் :** தலைவன் செலவினைப் பாங்கி ஏற்றுக் கொள்ளுதல்.

**5. சென்றுழிக் கலங்கல் :** தலைவன் ஒருவழித் தணத்தலில் பிரிந்த பிறகு தலைவி கலங்குதல்.

**6. தேற்றி ஆற்றுவித்தல் :** தலைவியைப் பாங்கி தேற்றித் தெளிவுறுத்தல்.

**7. வந்துழி நொந்துரை :** தலைவன் சென்று மீண்டு வந்த பின்னர்ப் பாங்கி தாங்கள் பட்ட மன வருத்தத்தினைக் கூறுதல்; அதற்குத் தலைவனும் வருத்தப்பட்டுக் கூறுதல்.

### ஒருவழித் தணத்தலின் விரி

**168. தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றலும் (51)**
**மென்சொல் பாங்கி விலக்கலும் தலைவன்**
**நீங்கல் வேண்டலும் பாங்கி விடுத்தலும்**
**தலைவிக்கு அவன்செலவு உணர்த்தலும் தலைவி**
**நெஞ்சொடு புலத்தலும் சென்றோன் நீடலில்**

**காமம் மிக்க கழிபடர் கிளவியும்**
**கோல்தொடிப் பாங்கி ஆற்றுவித்தலும் அவன்**
**வந்தமை உணர்த்தலும் வந்தோன் தன்னோடு**
**நொந்து வினாதலும் வெந்திறல் வேலோன்**
**பாங்கியொடு நொந்து வினாதலும் பாங்கி**
**இறைவியை ஆற்றுவித் திருந்த அருமை**
**கூறலும் என்னும் ஆறிரு கிளவியும்**
**ஒருவழித் தணத்தலின் விரியெனப் படுமே.**

மேலே குறிக்கப்பட்ட பன்னிரண்டும் ஒருவழித் தணத்தலின் விரியாகும்.

**1. தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்**

தான் தன் ஊருக்குச் செல்லும் பிரிவைத் தலைவன் பாங்கியிடம் கூறுதல்.

அலை தாக்குதலில் அசைந்து மணம் பரப்பும் தாழம்பூக்கள் நிறைந்த என் ஊருக்குச் சென்று திரும்பி வந்து தலைவியை மணம் செய்து கொள்வேன். தலைவியைத் தேற்றிக் காப்பாயாக. **நிரைகேச வஞ்சி அஞ்சேல் என்று தேற்றுதல் நின்கடனே** (தஞ்.கோ.248)

**2. பாங்கி தலைமகனைச் செலவு விலக்கல்**

தலைவியைப் பிரிய வேண்டாம் எனப் பாங்கி தலைவனிடம் கூறுதல்.

மணிகளை அருவிகள் உருட்டிக் கொண்டு வரும் மலைநாட்டுத் தலைவனே! தலைவியைப் பிரியாது இருப்பாயாக. நீ செல்லின் விரைந்து வருவாய் அல்லை. வாடையோ மிகவும் கடுமையாக இருக்கின்றது.

**வருவை அல்லை வாடை நனிகொடிதே!**
**அருவரை மருங்கின் ஆய்மணி வரன்றி**
**ஒல்லென இழிதரும் அருவி நின்**
**கல்லுடை நாட்டுச் செல்லல் தெய்யோ!** **(ஐங்.233)**

**3. தலைவன் நீங்கல் வேண்டல்**

தலைவன் தன் ஊருக்குச் சென்று வரவேண்டிய நிலையைப் பாங்கியிடம் கூறுதல்.

**குழலி சென்றே வரல் வேண்டும் எம் ஊரகத்தே**

**(தஞ். கோ.250)**

**4. தலைமகனைப் பாங்கி விடுத்தல்**

தலைமகளைப் பிரிந்து தலைவன் சென்று வரப் பாங்கி ஒப்புக் கொள்ளுதல்.

# 17. வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிவு

*தலைவியுடன் களவியற் பயிலும் தலைவன் அவளை மணத்தற்கு வேண்டும் பரிசப் பொருள் கொடுக்க வேண்டிப் பொருள் ஈட்டி வரத் தலைவியை விட்டு நீங்கி இருதிங்கள் எல்லைக்குள் நாடு இடையிட்டும் காடு இடையிட்டும் செல்லும் பிரிவு. தன்முன்னோர் ஈட்டிய செல்வம் மிகுதியும் உண்டேனும் தான் முயன்று தேடிய பொருளையே பரிசப் பொருளாக வழங்குதல் வேண்டும் என்ற உளக்கருத்தால் தலைவன் களவொழுக்கத்திடையே இப்பிரிவை மேற்கொள்வான். (அக. விள. உரை. 41)*

*களவினுள் தவிர்ச்சி வரைவின் ஈட்டம்*
*திங்கள் இரண்டின் அகமென மொழிப*

*(இறை.கள.32)*

## வரைவிடைவைத்துப் பொருள் வயின் பிரிதலின் வகை

169. பிரிவு அறிவுறுத்தல் பிரிவு உடன் படாமை
பிரிவு உடன்படுத்தல் பிரிவு உடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சி என்று
ஒருமையில் கூறிய ஒன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிவே.

மேலே குறிக்கப்பட்ட ஒன்பதும் வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதலின் வகையாகும்.

**1. பிரிவு அறிவுறுத்தல் :** தான் வரைவிடை வைத்துப் பொருள் காரணமாகப் பிரிந்து போவதைத் தலைவிக்குத் தெரிவிக்குமாறு தலைவன் பாங்கியிடம் கூறுதல்.

**2. பிரிவு உடன்படாமை :** தலைவன் பிரிந்து செல்வதற்குப் பாங்கி உடன் படாது மறுத்தல்.

**3. பிரிவு உடன் படுத்தல் :** தலைவன் பாங்கியைப் பிரிவுக்கு உடன்படச் செய்தல்.

**4. பிரிவு உடன்படுதல் :** தலைவன் பிரிவுக்குப் பாங்கி உடன்படுதல்.

**5. பிரிவுழிக் கலங்கல் :** தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிந்ததை அறிந்து தலைவி மனங் கலங்கி வருந்துதல்.

**6. வன்புறை :** பாங்கி தோழிக்கு வற்புறுத்திக் கூறுதல்.

**7. வன்பொறை :** தலைவன் பிரிவினால் நேர்ந்த பொறுத்தற்கரிய துயரத்தை மன வன்மையால் தலைவி பொறுத்துக் கொள்ளுதல்.

**8. வரும் வழிக் கலங்கல் :** தலைவன் மீண்டு வரும் வழியிடையே தன்னைப் பிரிந்து வருந்தும் தலைவியின் ஆற்றாமையை நினைத்து மனம் கலங்கிக் கூறுதல்.

**9. வந்துழி மகிழ்ச்சி :** தலைவன் மீண்டு வந்தபோது தலைவி மகிழ்ச்சி அடைதல்.

(53)

## வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதலின் விரி

170. என்பொருட் பிரிவு உணர்த்து ஏந்திழைக்கு என்றலும்
நின்பொருள் பிரிவுஉரை நீஅவட்கு என்றலும்
நீடேன் என்றுஅவன் நீங்கலும் பாங்கி
ஓரிடக் கண்ணிக்கு அவன்செலவு உணர்த்தலும்
பூங்குழை இரங்கலும் பாங்கி கொடுஞ்சொல்
சொல்லலும் தலைவி கொடுஞ்சொல் சொல்லலும்
வருகுவர் மீண்டுஎனப் பாங்கி வலித்தலும்
பருவம் கண்டு பெருமகள் புலம்பலும்
இகுளைவம்பு என்றலும் இறைமகள் மறுத்தலும்
அவர்தூதாகி வந்து அடைந்தது இப்பொழுது எனத்
துணைவி சாற்றலும் பிணைவழி ஆற்றலும்
அவன் அவண் புலம்பலும் அவன்வருங் காலைப்
பாகன் தன்னொடும் மேகம் தன்னொடும்
சோகம் கொண்டவன் சொல்லலும் பாங்கி
வலம்புரி கேட்டுஅவன் வரவு அறிவுறுத்தலும்
வலம்புரிக் கிழத்தி வாழ்த்தலும் வந்துழி
நினைத்தமை வினாதலும் நினைந்தமை செப்பலும்
அனைத்தகை அவளை ஆற்றுவித்து இருந்தமை
பாங்கி கூறலும் எனவாங்கு எழு மூன்றும்
வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிவின்
விரியென விளம்பினர் தெரிமொழிப் புலவர்.

மேலே குறிக்கப்பட்ட இருபத்தொன்றும் வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிதலின் விரியாகும்.

### 1. என் பொருட்பிரிவு உணர்த்து ஏந்திழைக்கு என்றல்

*தான் பொருள் வயின் பிரிந்து செல்வதைத் தலைவன் பாங்கியிடம் தலைவிக்கு உணர்த்தச் சொல்லுதல்.*

நூல்போன்ற இடையை உடைய தலைவிக்குப் பரிசு பொருள் கொடுக்க வேண்டி பிரிகின்றேன். நீர் கொண்டு வரும் மேகம்போல் விரைந்து வருவேன். **உழைபோல் அரிநெடுங் கண்மயிலே! சென்று உணர்த்திதுவே.** (தஞ். கே.260)

**2. பாங்கி நின்பொருட் பிரிவு உரை நீ அவட்கு என்றல்**

பொருள் தேடப் பிரிவதைத் தலைவியிடம் நீயே சொல்லுக எனப் பாங்கி தலைவனிடம் கூறல்.

திருமகளைப்போன்ற தலைவியிடம் நின்பிரிவை நீயே சொல்வாயாக.

**திசையும் பரவும் திருவனையாள் தன் திருவுளத்துக்கு**
**இசையும்படி வல்லையேல் சொல்லி நீ பின் எழுந்தருளே**
***(தஞ்.கோ.261)***

**3. நீடேன் என்று அவன் நீங்குதல்**

காலந் தாழ்த்தாமல் விரைந்து வருவேன் எனப் பாங்கியிடம் கூறித் தலைவன் பிரிதல்.

கதிரவன் செலுத்தும் தேரின் குதிரையின் மீது ஊர்ந்து சென்று வெகு விரைவாக மாலையில் வந்து விடுவேன். **மாலைப் பொழுது வருவல் யான்** (தஞ்.கோ.262)

**4. பாங்கி தலைமகட்குத் தலைமகன் செலவு உணர்த்தல்**

தலைவியிடம் தலைவனின் பிரிவைப் பாங்கி கூறுதல்.

தலைவர் காடுகளைக் கடந்து பிரிந்து செல்கின்றார். அவர் பிரிவால் உன் கண்கள் வருந்தும் என்பதை உணராதவராய்ப் பிரிந்து விட்டார்.

**பாயல் கொண்ட பனிமலர் நெடுங்கண்**
**பூசல் கேளார் சேயர் என்ப!**
**இழை நெகிழ் செல்லல் உறீஇ**
**கழை முதிர் சோலைக் காடு இறந்தோரே** ***(ஐங்.315)***

**5. தலைமகள் இரங்கல்**

தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றமைக்குத் தலைவி வருந்துதல்.

தலைவர் பிரிய மாட்டார் என்று நம்பி இருந்தேன். தெரிவித்தால் பிரியவிடமாட்டாள் எனக் கருதிச்சொல்லாமல் பிரிந்து விட்டார். ஆற்றல் மிக்கோர் போர் புரியும்போது அரவம் தீண்டினாற் போல என் நெஞ்சம் பிரிவைத் தாங்க முடியாமல் துன்புறுகின்றது.

**செல்வார் அல்லர் என்றுயான் இகழ்ந்தனனே**
**ஒல்வாள் அல்லள் என்றுஅவர் இகழ்ந்தனரே**
**ஆயிடை இருபேர் ஆண்மை செய்த பூசல்**
**நல் அராக் கதுவியாங்கு என்**
**அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே** ***(குறுந்.43)***

**6. பாங்கி கொடுஞ்சொல் சொல்லல்**

தலைவனைப் பிரிந்து தலைவி வருந்துவதைக் கண்டு பாங்கி கடுமையாகப் பேசுதல்.